**TNTT070025032026**

நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, கோவில்பட்டி
முன்னிலை – திருமதி. மு.மணி மேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, கோவில்பட்டி
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை
Crl.M.P.No. 730/2026
in
Cr.No. 491/25

அரசுக்காக
திரு.சண்முகம்,
காவல் உதவி ஆய்வாளர்,
கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்,
குற்ற எண். 491/25 ... மனுதாரர்/விசாரணை அதிகாரி

ஈஸ்வரன், (வயது 39/26),
த/பெ. தங்கபாண்டி,
C–146–E–1, அண்ணா காலனி,
ஆலஊரணி,
திருத்தங்கல்,
சிவகாசி தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
... எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 08.06.2026 ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களையும் சத்தியபிரமாண வாக்குமூலத்தையும் பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1) இம்மனுதாரரான கோவில்பட்டிமேற்கு காவல் உதவி ஆய்வாளரான திரு. சண்முகம் அவர்கள் எதிரியை காவல்துறை காவலில் 3 நாட்கள் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்த வழக்கின் வாதி 07.09.2025 ம்தேதி காலை 08.30 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 842 திரு. ஜெயராஜ் பெற்று புகார்மனுவின் தன்மைக்கேற்ப கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண் 491/2025 u/s 304(2) BNS ஆக வழக்கு பதிவு செய்ததில், இவ்வழக்கின் வாதி பரமேஸ்வரி கோவில்பட்டி தோணுகால் விலக்கு, விநாயகா நகரில் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும். புகார்தாரர் டெய்லர் வேலை செய்வதாகவும், புகார்தாரரின் கணவர் முருகேசன் கோவில்பட்டி விக்னேஷ் ஹோட்டலில் சமையல் மாஸ்டராக உள்ளதாகவும். புகார்தாரருக்கு செல்வகணேஷ், ஜீவன்குமார் என்ற இரண்டு மகன்கள் உள்ளதாகவும். 07.09.2025 ம் தேதி அதிகாலை சுமார் 05.15 மணியளவில் புகார்தாரர் தனது வீட்டின் வாசலில் தண்ணீர் தெளித்து நின்றிருந்தபோது, அவரது தெருவில் Hero Splendor பைக்கில் ஹெல்மெட் போட்டுக்கொண்டும், மாஸ்க் போட்டுக்கொண்டும், ஊதா கலர் முழுகை சட்டையும், பேண்ட்டும் போட்டிருந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் புகார்தாரரின் வீட்டை தாண்டி தெருவின் முக்கு வரைக்கும் சென்று பிறகு அப்படியே திரும்பி புகார்தாரரின் வீட்டை தாண்டி இரண்டு வீடு கழித்து அவரது பைக்கை ஆப் செய்யாமல் சைடு ஸ்டாண்ட் போட்டு இறங்கி நடந்து வந்து, புகார்தாரரிடம் கார்த்திகேயன் வீடு எங்க இருக்கு என்று கேட்டதாகவும், புகார்தாரர் யோசிப்பதற்குள் அந்த நபர் வேகமாக புகார்தாரரின் கழுத்தில் போட்டிருந்த தங்க ஓம் டாலருடன் உள்ள சுமார் 3 பவுன் தங்க செயினை அத்து பறித்ததாகவும், புகார்தாரர் சட்டென்று செயினை பிடித்துக்கொள்ளவும் அந்த நபர் புகார்தாரரின் கையை தட்டிவிட்டு புகார்தாரரின் செயினை இழுத்ததாகவும், அந்த செயின் இரண்டாக அறுந்து ஓம் டாலரும், சுமார் ½ பவுன் தங்க செயினும் புகார்தாரரின் கையில் அகப்பட்டதாகவும், மீதி சுமார் 2½ பவுன் தங்க செயினை அவன் பறித்து கொண்டு ஓடியதாகவும், புகார்தாரர் சத்தம்போட்டு அலறவும் வீட்டுக்குள் இருந்த புகார்தாரரின் இரண்டு

மகன்களும் ஓடி வந்ததாகவும், அதற்குள் அந்த நபர் ஓடிபோய் அவன் பைக்கை எடுத்துக்கொண்டு கிழக்கு பார்த்து வேகமாக போனதாகவும். புகார்தாரரின் மகன்கள் அந்த நபரை விரட்டிக்கொண்டு பின்னாடி அவர்களது பைக்கில் போனதாகவும். ஆனால் அந்த நபரை பிடிக்க முடியவில்லை என்றும். மேலும் அந்த நபர் புகார்தாரரின் செயினை அத்து பறிக்கும்போது புகார்தாரரின் கையை தட்டிவிட்டதில் புகார்தாரரின் இரண்டு கைகளின் மணிக்கட்டின் அருகிலும் நகக்கீரல் காயம் ஏற்பட்டதாகவும், புகாரதாரரின் கழுத்தின் முன்பகுதியிலும் நகக்கீரல் காயம் ஏற்பட்டதாகவும், அந்த நபர் பறித்து சென்ற சுமார் 2½ பவுன் தங்க செயினின் மதிப்பு சுமார் ரூ.75,000/- இருக்கும் என்றும், புகார்தாரரின் தங்க செயினை பறித்து சென்ற நபரை கண்டுபிடித்து தங்க செயினை மீட்டு நடவடிக்கை எடுக்க கேட்டு கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் திரு. ராமசந்திரன் அவர்கள் விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும்,

3) இவ்வழக்கின் விசாரணை நகலை உதவி ஆய்வாளர் திரு.ராமசந்தின் விசாரணைக்கு பெற்றுகொண்டு சம்பவ இடம் 07.09.2025 ம் தேதி காலை 09.30 மணிக்கு சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் சாட்சிகள் முன்புக்கு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தும், சாட்சிகளை விசாரித்து 180(3) BNSS படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் உதவி ஆய்வாளர் திரு.ராமசந்திரன் பணியிட மாறுதலில் சென்றபடியால் இவ்வழக்கை நான் எனது தொடர் விசாரணைக்கு பெற்றுகொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டும் சாட்சிகளை விசாரணை செய்ததில் முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியவாரே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும்,

4) இவ்வழக்கில் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் எனது புலன்விசாரணையில் இருந்தும் 07.09.2025 ம்தேதி காலை 05.15 மணியில் கோவில்பட்டி தோணுகால் விலக்கு விநாயகாநகரில் உள்ள புகார்தாரர் பரமேஸ்வரியின் வீட்டின்முன்பு பரமேஸ்வரி வாசல் தெளித்து நின்றுபோது அந்த தெருவில் Hero Splender பைக்கில் வந்த நபர் ஹெல்மெட் போட்டுக்கொண்டும் மாஸ்க் போட்டுக்கொண்டும் ஊதா கலர் முழுகை சட்டையும் பேண்ட்டும் போட்டிருந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் புகார்தாரரின் கழுத்தில் போட்டிருந்த சுமார் 3 பவுன் தங்க செயினை வலிந்து பறித்து அந்த செயின் அறுந்து அதிலிருந்து சுமார் ½ பவுன் செயின் மற்றும் டாலரும் புகார்தாரர் கையில் அகப்பட்டது போக சுமார் 2 ½ பவுன் செயினை எதிரி பறித்து சென்ற சம்பவம் உண்மை என புலனாகின்றது என்றும்,

5) இவ்வழக்கில் எதிரியை தேடிவந்த நிலையில் எதிர்மனுதார் / எதிரியை 29.04.2026 ம் தேதி 21.30 மணிக்கு விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புதூர் நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 214/2026 பிரிவு 304(2) BNS வழக்கில் கைது செய்து விசாரிக்க எதிர்மனுதார் / எதிரி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிர்மனுதார் / எதிரி 2025 ம் வருடம் செப்டம்பரில் கோவில்பட்டியில் இருந்து திருநெல்வேலி செல்லும் மெயின்ரோட்டில், கோவில்பட்டி ஊருக்குள் செல்லும் மேம்பாலத்தை தாண்டி ஒரு வீட்டின் முன்பு அதிகாலையில் முற்றத்தை கூட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் நகையை பறித்ததாக ஒப்புகொண்டுள்ளார் என்றும், மேற்படி எதிர்மனுதார் / எதிரி ஸ்ரீவில்லிப்புதூர் காவல் நிலைய குற்ற வழக்கில் நீதிமன்ற காவல் அடைப்பு செய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட சிறையில் விசாரணை கைதியாக இருந்து வருகிறார் என்றும்,

6) மேலும் எதிர்மனுதார் / எதிரியை கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண். 491/2025 பிரிவு 304(2) BNS வழக்கில் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டி 06.05.2026 ம் தேதி 13.05 மணிக்கு விருதுநகர் மாவட்ட சிறை கண்காணிப்பாளர் முன்புக்கு சம்பிரதாய கைது செய்யப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு கைதி இடைப்பெயர்ச்சி ஆணை (PT Warrant) பெறப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு எதிர்மனுதார் / எதிரி சமூகம் நீதிமன்றத்தில் இன்று 08.06.2026 ம் தேதி ஆஜர் செய்யப்பட்டுள்ளார் எனவும் மேற்படி எதிரியை நீதிமன்ற காவலில் இருந்து கொடுத்தால் தான் இவ்வழக்கின் முழுவிவரம் மற்றும் வழக்கு சம்பந்தமாக விசாரிக்க முடியும் என்பதால் புலன் விசாரணைக்கு உதவியாக எதிரியின் இருப்பு தேவை உள்ளது எனவும், எதிரியை போலிஸ் காவலுக்கு எடுத்து விசாரிக்கும் பட்சத்தில் வழக்கின் உண்மைகள் தெரியவரும் என்பதாலும்,

7) எதிரியை விசாரணை செய்தால் எதிரிக்கு மட்டுமே தெரிந்த உண்மைகளை அறியமுடியும் என்றும், மேற்படி எதிரியை போலிஸ் காவலில் எடுத்து விசாரணை செய்ய வேண்டியது நீதியின் பொருட்டு மிகவும் அவசியமாகிறது எனவும், எனவே எதிரியை 3 நாட்கள் போலிஸ் காவலில் ஒப்படைக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாகவும்,

8) இவ்வழக்கின் எதிரி ஈஸ்வரன் என்பவரை போலிஸ் காவலுக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அவருக்கு உண்டான உணவு, தங்குமிடம் மற்றும் ஏதேனும் மருத்துவ செலவு ஏற்பட்டால் அரசு செலவில் செலவு செய்வேன் எனவும், எதிரியை குறிப்பிட்ட நேரத்திலேயேயோ அதற்கு முன்பாகவோ நல்ல முறையில் நீதிமன்றத்தில் ஒப்படைப்பேன் என்று உறுதி கூறுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

9) இம்மனுவானது crlmp 730/2026 ஆக இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டது எதிரி இன்று சிறையில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார். எதிரிக்கு மனுதாரார் தாக்கல் செய்துள்ள மனுவின் நகல்கள் வழங்கப்பட்டு போலிஸ் காவலில் செல்ல ஆட்சபணை உள்ளதா என கேட்டபோது எதிரி ஆட்சபேணை இல்லை என்று கூறினார் மேலும் எதிரி தனக்கு காயம் ஏதும் இல்லை என்று கூறினார் எதிரியின் முன்னிலையில் மனுதாரரான காவல் உதவி ஆய்வாளரின் சத்திய பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது மனுதாரர் தனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் ஏற்கனவே விவரித்தவாறு மனுவில் கூறியுள்ள விவரங்களை அவ்வாறே வலியுத்தி கூறியுள்ளார்.

10) மனு மற்றும் மனுதாரரின் சத்திய பிரமாண வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கானது புலண் விசாரணையில் நிலுவையில் இருந்து வருவது தெரியவருகிறது. மேலும் எதிரியை சம்பிரதாய கைது செய்து இந்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது தெரியவருகிறது. அதன் காரணமாக மனுதாரர் ஆன புலண் விசாரணை அதிகாரிக்கு BNSS பிரிவு 187 ன் கீழ் வழங்கப்படும் 24 மணிநேரம் காலக்கெடு இவ்வழக்கில் கிடைக்கவில்லை. மேலும் சம்பவத்தின் போது வேறுயாரும் எதிரியுடன் ஈடுபட்டார்களா யாரேனும் தூண்டுதல் செய்தார்களா சம்பவம் குறித்த சாட்சிகள் தங்கள் விசாரணையில் சொல்லியுள்ள தகவல்களை உண்மைத்தன்மை ஆகியவை குறித்து மேற்படி எதிரியை புலன் விசாரணை அதிகாரியான மனுதாரால் விசாரிக்கப்பட்டால் தான் தெளிவுபடுத்த முடியும் எனவே எதிரி போலிஸ் காவலில் தரப்படவேண்டும் என மனுதாரரால் கோரப்படுவது நியாமானதாவும் ஏற்றத்தக்கதாகவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதே நேரத்தில் எதிரியின் நலன் கருதி போதிய நிபந்தனைகள் விசாரணை அதிகாரியான மனுதாரருக்கு விதிக்க வேண்டும் என்றும் அதேபோல் இம்மனுவை பொறுத்து எதிரியை போலிஸ் காவலில்

வைத்து விசாரிக்க ஒரு நாள் மட்டும் அனுமதி வழங்குவது போதுமானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரியை ஒரு நாள் போலிஸ் காவலில் வைத்து விசாரிக்க இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான மனுதாரார் கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களுக்கு அனுமதி அளித்து உத்தரவு இடப்படுகிறது. எதிரியை தன்னுடைய பொறுப்பில் இந்நீதிமன்றத்தில் இருந்து 08.06.2026 ம் தேதி மாலை 05.00 மணிக்கு பெற்றுக்கொள்ளும் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை தன்னுடைய பொறுப்பில் இருக்கும்போது அவருக்கு உணவு, உறைவிடம், போதிய ஓய்வு ஆகியவற்றை அளிக்கவேண்டும் என்றும், எதிரியின் உடலுக்கோ மனதிற்கோ எவ்வித தீங்கும் ஏற்படும் வகையில் நடந்துகொள்ள கூடாது எனவும் பிறர் நடந்துகொள்ள அனுமதிக்க கூடாது எனவும் உத்தரவிடப்படுகிறது எதிரியை தன்னுடைய விசாரணை முடித்து திரும்ப நல்ல உடல்நிலையிலும் மனநிலையிலும் இந்நீதிமன்றம் முன்பாக காவல் துறை காவல் முடிந்தவுடன் வரும் 09.06.2026 ம் தேதி மாலை 05.00 மணிக்கோ அதற்கு முன்போ இந்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லபட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 08 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

MANIMEGALA

Digitally signed by MANIMEGALA
Date: 2026.06.08 17:15:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி

பெறுநர்

திரு. சண்முகம்,
காவல் உதவி ஆய்வாளர்,
கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்.

<u>நகல்</u>

ஈஸ்வரன், (வயது 39/26),
த/பெ. தங்கபாண்டி,
C–146–E–1, அண்ணா காலனி,
ஆலஊரணி,
திருத்தங்கல்,
சிவகாசி தாலூகா,
விருதுநகர் மாவட்டம்.

2. கண்காணிப்பாளர்
மாவட்ட சிறை விருதுநகர்.

3. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி
தூத்துக்குடி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

MANIMEGALA
Digitally signed by MANIMEGALA
Date: 2026.06.08 17:15:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி